# அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

## புதிய பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைத் தாபிப்பதற்காகவும் தற்பொழுது இருக்கின்ற பிரிவுகளைத் திருத்தியமைப்பதற்குமான புதிய கருத்துக்களைக் கோருதல்.

அரசாங்கமானது நிர்வாக அபிவிருத்தி முன்னுரிமைகள் அடிப்படையில் புதிய பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைத் தாபிப்பதற்காகவும் தற்பொழுது இருக்கின்ற பிரிவுகளைத் திருத்தியமைப்பதற்காகவும் பெறப்பட்ட பல்வேறு வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளின் பிரகாரம் எல்லை நிர்ணயக் குழுவொன்றினை நியமனம் செய்துள்ளது.

01. இந்தக் குழுவானது இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேட்ட உசாவுநருமான திரு. எச்.பீ. திசாநாயக்கவின் தலைமைத்துவத்தையும் அரசாங்க சேவை மற்றும் அனுபவம் வாய்ந்த ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 13 அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது.

02. இக் குழுவின் நோக்கெல்லைகளாவன பின்வருமாறு:-

2-1 புதிய பிரதேச செயலாளர் பிரிவுகளைத் தாபித்தல், தற்பொழுது இருக்கின்ற பிரிவுகளைத் திருத்தியமைத்தல் தொடர்பாகப் பெறப்படும் வேண்டுகோள்கள்/முன்மொழிவுகளைக் கருத்திற் கொண்டு சிபார்சுகளை உருவாக்குதல்.

2-2 புதிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைத் தாபிப்பத்தல், தற்பொழுது இருக்கின்ற பிரிவுகளைத் திருத்தியமைத்தல் தொடர்பாகப் பெறப்படும் வேண்டுகோள்கள்/முன்மொழிவுகளைக் கருத்திற் கொண்டு சிபார்சுகளை உருவாக்குதல்.

03. பின்வரும் மாதிரிகளுடன் இணங்குமாறு 2-1 மற்றும் 2-2 இன் மீது அவர்களின் எழுத்து மூலப் பிரதிநிதித்துவத்தினை விரிவாக முன்வைப்பதற்கு பொதுமக்களின் பிரதிநிதிகள், சிவில் நிறுவனங்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களை இக்குழுவானது அழைக்கின்றது.இத்தகைய பிரதிநிதித்துவங்கள் 2010-05-30 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இக்குழுவின் செயலாளரை அடையும் வண்ணம் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ முன்வைக்கப்படுதல் முடியும். நேரடியாகவும் சமர்ப்பிக்கப்பட முடியும் என்பதனைத் தயவு கூர்ந்து கவனத்திற் கொள்ளவும். (இத் தகவலானது www.pubad.gov.lk என்னும் இணையத்தள முகவரியூடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.)

எஸ்.கே. வீரதுங்க
செயலாளர்
எல்லை நிர்ணயக் குழு

2010.04.26

திகதி : ----------------------

- பொதுமக்களின் பிரதிநிதி / சிவில் நிறுவனம்/ அரசாங்க உத்தியோத்தர் / பொது மக்களின் பெயர் ------------------------------------------------
- முகவரி ----------------------------------------------- தொலைபேசி இலக்கம் -----------------------------------
- முன்மொழிவானது மாவட்ட செயலாளர் பிரிவினைப் புதிதாகத் தாபிப்பதற்கானதா அல்லது திருத்தியமைப்பதற்கானதா ----------------------------------------------------------------------------------------
- முன்மொழிவானது கிராம உத்தியோகத்தர் பிரிவினைப் புதிதாகத் தாபிப்பதற்கானதா அல்லது திருத்தியமைப்பதற்கானதா ----------------------------------------------------------------------------------------
- முன்மொழிவும் அதற்கான காரணங்களும் ---------------------------------------------------------------- (முன்மொழிவை வேறான தாளில் அதற்கான காரணங்களுடன் இணைக்கவும். ஒவ்வொரு வித்தியாசமான முன்மொழிவிற்கும் தனித்தனியான அறிக்கைகளை இணைக்கவும்).

எஸ்.கே. வீரதுங்க
மேலதிக செயலாளர் - உள்நாட்டலுவல்கள்
எல்லை நிர்ணயக் குழுச் செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

தொலைபேசி: 2687772, 2687774, 2696211
மின்னஞ்சல் : adsecha@pubad.gov.lk
தொலைநகல்: 2688206, 2691073